*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **22 டிசம்பர், 2024**

## <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி மாநிலத்தில், நல்லாட்சி வார விழாவை ஒட்டி, கிராமங்களை நோக்கி மக்கள் குறைதீர்ப்பு முகாம் வில்லியனூர், பிள்ளையார்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் இன்று(22.12.2024) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுனர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு சாய் ஜெ. சரவணன்குமார், தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், அரசு செயலர் திரு பங்கஜ் குமார் ஜா, துணைநிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், துணை ஆட்சியர் (தெற்கு) சோம சேகர் அப்பாராவ் கொட்டாரு மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

துணைநிலை ஆளுநர் அங்கு அமைக்கப்பட்டிருந்த துறைசார்ந்த குறைதீர்ப்பு அரங்குகளைப் பார்வையிட்டார். மேலும், தாயின் பெயரில் ஒரு மரம் என்ற பாரதப் பிரதமரின் திட்டத்தின்கீழ் மரக்கன்று நட்டார். அதனைத் தொடர்ந்து ஊசுடு ஏரியை துணைநிலை ஆளுநர் பார்வையிட்டார்.